## சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

## MCOP. No.65/2021

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ஆம் நாள் எ.சா.1 சாட்சி திரு.சீனிவாசன் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சீனிவாசன் | தொழில் | : உதவியாளர் |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுக்கா | : |

எ.சா.1 : முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் எனக்கு சாட்சியமளிக்க கொடுக்கப்பட்ட அனுமதிக்கடிதம் கொடுக்கப்பட்டது. அது எ.ம.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களுக்கு கதவு எண்.14, யசோதராவீதி, ஓடந்துறை, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் என்ற முகவரியில் வசிக்கும் சிவராமன் மகன் அருண் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் எடுத்திருந்தால் ஒப்படைக்க அழைப்பாணை வந்தது. மேற்கண்ட நபருக்கு ஆய்வு செய்ததில் எங்களது அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை. இது குறித்து வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய TN 40 T 8842 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை **எ.ம.சா.ஆ.2,** மோட்டார் வாகன சோதனை அறிக்கை **எ.ம.சா.ஆ.3**, e–

challan **எ.ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி வாகனமானது விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் என்றால் சரிதான். அதன் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் அருண் என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாததால் வாகனத்தை கையகப்படுத்த காவல் துறையினருக்கு அறிவிப்பு கொடுத்தோமா என்றால் இல்லை. ஸ்பாட் பைன் வாங்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.